**INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM**
**SUMMATIVE ASSESSMENT I - OCTOBER - 2015**

Gss - Wb

**SUBJECT - TAMIL**
**CLASS – X**

Time: 3 Hours — Maximum Marks: 90
நேரம்: 3 மணி — மொத்த மதிப்பெண்கள்: 90

**The question paper is divided into four sections:**
**இக் கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**

| | | | | |
|---|---|---|---|---|
| SECTION: A | | Reading comprehension | - | 15 Marks |
| பிரிவு: | அ | படித்தல் (உரைநடைப்பகுதி) | - | 15 மதிப்பெண்கள் |
| SECTION: B | | Writing | - | 20 Marks |
| பிரிவு: | ஆ | எழுதுதல் | - | 20 மதிப்பெண்கள் |
| SECTION: C | | Grammar | - | 15 Marks |
| பிரிவு: | இ | இலக்கணம் | - | 15 மதிப்பெண்கள் |
| ' CTION: D | | Literature/Text Books | - | 40 Marks |
| பிரிவு: | ஈ | இலக்கியம்/தமிழ்ப்பாடநூல் | - | 40 மதிப்பெண்கள் |

குறிப்பு :

- கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.
- விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.
- வினாக்களின் எண்களை உரிய இடத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

## பிரிவு - அ

**1. கீழ்வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

பிரமிடு என்பது பட்டைக்கூம்பு வடிவில் அமைந்த ஒரு கட்டிட அமைப்பு ஆகும். இதன் அடி பெரும்பாலும் சதுரமாக அமைந்திருக்கும். எனினும், இது முக்கோணம், வேறுவகைப் பல்கோணங்கள் ஆகிய வடிவங்களிலும் அமையலாம். இக் கட்டிடங்களின் நிறையில் பெரும் பகுதி அடிப்பகுதியில் அமைந்திருப்பதால், இவற்றின் புவியீர்ப்பு மையம் நிலத்துக்கு அண்மையில் அமைந்திருக்கும். இதனால், சில பழங்கால நாகரிக மக்கள் உறுதியான நினைவுச் சின்னங்களை அமைப்பதற்கு இந்த வடிவத்தைத் தேர்ந்தெடுத்தனர்.

பிரமிடு வடிவிலான கட்டிடங்கள் எகிப்தியர், மாயர், சுமேரியர் உள்ளிட்ட பல பழம் நாகரிக மக்களால் அமைக்கப்பட்டன. பல ஆயிரம் ஆண்டுகளாக உலகின் மிகப்பெரிய அமைப்புக்கள் பிரமிடுகளாகவே இருந்தன. முதலில் எகிப்தில் டாசுர் நக்குரோபோலிசில் உள்ள சிவப்புப் பிரமிட்டும், பின்னர் கூபுவின் பெரிய பிரமிடும் மிகப்பெரிய அமைப்புக்களாக இருந்தன. பழைய ஏழு உலக அதிசயங்களுள் இன்றும் நிலைத்திருப்பது கூபுவின் பெரிய பிரமிடு மட்டுமே. இது பெரும்பாலும் சுண்ணக்கல்லால் கட்டப்பட்டுள்ளது; சில உள்ளறைகள் சிவப்பு கிரானைட்டு கற்களால் ஆனவை. கட்டிடவியல் அதிசயம் எனப்படும் பெரி பிரமிடில் 2.5 தொன்கள் (5,500 lb) லில்



INTERNATIONAL INDIAN SCHOOL
LIBRARY
SENIOR GIRLS
DAMMAM

இருந்து 15 தொன்கள் (33.000 lb) வரை எடையுள்ள 1,300,000 கற்கள் கொண்டு 13 ஏக்கரா நிலப்பரப்பில் கட்டப்பட்டுள்ளது. இதன் அடி சதுரத்தின் ஒவ்வொரு பக்கமும் ஏறத்தாழ 230 மீ (755 அடி) நீளமுடையதாக உள்ளது. இதன் உயரம் 137 மீ (455 அடி)யாக உள்ளது. இதுவே மிக உயரமான பிரமிடாக விளங்குகிறது.

1. பிரமிடு கட்டிடத்தின் சிறப்பு யாது?

அ) பொருள்களை ஆ) நினைவுச் சின்னங்களை இ) வசிப்பதற்கு ஈ) உறங்குமிடமாக

2. பிரமிடு எந்த மக்களால் அமைக்கப்பட்டது?

அ) அமெரிக்கர் ஆ) ஜப்பானியர் இ) சீனர் ஈ) எகிப்தியர்

3. ஏழு அதிசியங்களில் ஒன்றாக இருக்கும் பிரமிடு எது?

அ) கருப்பு பிரமிடு ஆ) சிவப்பு பிரமிடு இ) கூபுவின் பெரிய பிரமிடு ஈ) சோலுலாவின் பிரமிடு

4. கூபுவின் பெரிய பிரமிடு எந்தப்பொருளால் கட்டப்பட்டது?

அ) சுண்ணக்கல் ஆ) கருங்கல் இ) செங்கல் ஈ) சிமெண்ட்

5. கூபுவின் பெரிய பிரமிடுவின் உயரம் யாது?

அ) 173 மீ ஆ) 137 மீ இ) 317 மீ ஈ) 731 மீ

**2. கீழ்வரும் பத்தியைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவிற்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

கூழைக்கடா என்பது (பெலிக்கனிடே) கூழைக்கடாக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பறவை. இப்பறவையை வேடந்தாங்கல் பகுதியில் மத்தாளி அல்லது மத்தாளிக் கொக்கு என்றும் அழைக்கின்றனர். கூழைக்கடாக்கள் பறக்கும் பறவைகளில் மிகப் பெரிய நீர்ப் பறவை. கூழைக்கடா நன்றாக நீந்தக் கூடியது. இந்தியாவில் புள்ளிவாய்க் கூழைக்கிடா, டால்மில்டன், பெரிய வெள்ளைக் கூழைக்கடா ஆகிய மூவகை கூழைக்கடாக்க காணப்படுகின்றன. பெரிய உடலும் சிறு கால்களும் கொண்டவை கூழைக்கிடாக்கள்; அவற்றின் சிறப்பம்சம் தொங்கும் பை போன்ற தாடை. மேல் அலகின் நுனி கீழ் நோக்கி வளைந்தது.

இது 20 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய பறவை. இதன் தசை கெட்டியாக இல்லாமல், மென்மையாகக் கூழ் போன்று இருப்பதாலும், கிடா போன்று பெரிதாக இருப்பதாலும் இதைக் கூழைக்கடா என அழைக்கிறார்கள். இதன் எடை 4.5 முதல் 11 கிலோகிராம் வரை இருக்கும். சிறகுகளின் நீளம் 2.7 மீ. மொத்த உயரம் 127 முதல் 182 செ.மீ. அலகு நீளம் 22 செ.மீ. கூழைக்கடாக்கள் நெடுந்தூரம் செல்லும் இயல்புடையவை. இவ்வினத்தின் எண்ணிக்கை துரித வீதத்தில் குறைந்து வருவதால் இதனை அச்சுறுத்துநிலையை எட்டியவை என்ற பிரிவில் ஐயுசிஎன் - சிவப்புப் பட்டியலில் வகுத்துள்ளது.

1. கூழைக்கடா என்ற பறவையின் இருப்பிடம் யாது?

அ) ஊட்டி ஆ) ஏற்காடு இ) வேடந்தாங்கல் ஈ) நாமக்கல்

2. மத்தாளிக் கொக்கு என்று அழைக்கப்படும் பறவை யாது?

அ) மயில் ஆ) பருந்து இ) நாரை ஈ) கூழைக்கடா

3. கூழைக்கடா என்ற பறவையின் சிறகுகளின் நீளம் எவ்வளவு?

அ) 7.2 மீ ஆ) 2.7 மீ இ) 3.7 மீ ஈ) 5.7 மீ

4. கூழைக்கடாவின் சிறப்பம்சம் யாது?

அ) தொங்கும் பை போன்ற தாடை ஆ) கால்கள் இ) சிறகுகள் ஈ) உடல்

5. இந்தியாவில் காணப்படும் கூழைக்கடாக்களின் வகைகள் எத்தனை?

அ) மூன்று வகை ஆ) நான்கு வகை இ) ஐந்து வகை ஈ) ஆறு வகை

**கீழ்வரும் பத்தியைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவிற்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

ஒரு நோயானது நோயை உருவாக்கும் பண்பு கொண்ட வைரசு, பக்டீரியா, பூஞ்சை, புரோட்டோசோவா, மற்றும் பல்கல ஒட்டுண்ணிகள் போன்ற நுண்ணுயிர்களின் காரணமாக ஏற்படுகிறது என்பது உறுதிப்படுத்தப்பட்டால், அந்நோய் தொற்றுநோய் என அழைக்கப்படுகிறது. இந்நோய்க்காரணிகள் விலங்குகளிலும், தாவரங்களிலும் நோயை ஏற்படுத்தலாம். தொற்றுநோயானது ஒரு குறிப்பிட்ட இனத்துக்குள்ளேயோ அல்லது ஒரு இனத்திலிருந்து, வேறொரு இனத்துக்கோ கடத்தப்படலாம். நோய்க்கடத்தல் வெவ்வேறு வழி முறைகளில் நடக்கலாம். நேரடி தொடுகையினால், காற்றின் வழியாக, நீரின் ஊடாக, உணவினால், தொடுகைக்குட்படும் பொருட்களினால் அல்லது ஒரு நோய்க்காவியினால் தொற்றுநோயானது கடத்தப்படலாம்.

சுவாசத்தொகுதியில் ஏற்படும் தொற்றுநோய்கள், மற்றும் மூளைக்காய்ச்சல் என்பன பொதுவாக காற்றுச் சிறுதுளிகளால் பரவுகின்றன. இக்காற்றுச் சிறுதுளிகள் தும்மும்போது, இருமும்போது, பேசும்போது, ஒருவரிலிருந்து, இன்னொருவருக்கு கடத்தப்படுகிறது. இரைப்பைகுடல் தொகுதியில் ஏற்படும் தொற்றுநோய்கள் பொதுவாக அசுத்தமடைந்த அதாவது நோய்க்கரணிகளைக் கொண்ட உணவு, நீர் போன்றவற்றால் ஏற்படுகின்றன.

1. தொற்று நோயை ஏற்படுத்தும் ஒட்டுண்ணிகளில் ஒன்று ________

அ) கொசு ஆ) ஈ இ) பாக்டீரியா ஈ) எறும்பு

2. தொற்று நோய் ஏற்படும் முறைகளில் இதுவும் ஒன்று.

அ) எழுதுகோல் வழியாக ஆ) காற்றின் வழியாக இ) பூக்களின் வழியாக ஈ) நூல்களின் வழியாக

3. பல்கல ஒட்டுண்ணிகள் என்பது யாது?

அ) நுண்ணுயிர்கள் ஆ) பூக்கள் இ) பழங்கள் ஈ) காய்கள்

4. சுவாசத் தொகுதியில் ஏற்படும் தொற்று நோய்கள் எதனால் பரவுகின்றன?

அ) மணல்களால் ஆ) நீரால் இ) தூசிகளால் ஈ) காற்றுச் சிறு துளிகளால்

5. அசுத்தமடைந்த நோய்க்காரணிகளைக் கொண்ட உணவு, நீர் உட்கொள்ளும்போது உடலின் எந்தப் பாகத்தில் தொற்று நோய் ஏற்படுகிறது?

அ) நுரையீரல் ஆ) இரைப்பைக் குடல் இ) சிறு நீரகம் ஈ) கைகள்

## பகுதி - ஆ

**4.** உனது ஊரில் நடைபெற இருக்கும் புத்தகக் கண்காட்சிக்கு உனது நண்பனுக்கு அழைப்பு விடுத்து ஓர் கடிதம் எழுதுக.

**அல்லது**

உனது உயர்கல்விக்குப் பிறகு பத்திரிக்கையாளர் பணிக்காக 'தினமலர்' பத்திரிக்கை முதல்வருக்கு ஓர் கடிதம் எழுதுக. **(8)**

**(உமது முகவரி: மதியழகன் / மதியழகி கதவு எண் - 36, அம்பேத்கார் சாலை, மதுரை 638 012 எனக்கொள்க)**

**5. ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று வரைக. (8)**

அ) முன்னுரை - அறிவியல் - அன்றாட வாழ்வு - உணவு - பயணம் - அலுவலகம் - வீடு - பயன்கள் - முடிவுரை

**அல்லது**

ஆ) முன்னுரை - சேமிப்பின் தேவை - எதிர் பாராச் செலவுகள் - சேமிப்பு முறைகள் - சிறு துளி பெருவெள்ளம் - திட்டத்தின் பயன் - முடிவுரை.

**அல்லது**

இ) முன்னுரை - சுற்றுச் சூழல் - அறிவியல் ஆபத்துக்கள் - சீர்கேடுகள் - விளைவுகள் - நமது கடமைகள் - முடிவுரை

**6.** உனது ஊரில் நடைபெற்ற 'வனவிலங்கு காப்பக முகாம்' குறித்து ஓர் அறிக்கை எழுதுக. **(4)**

**அல்லது**

உனது ஊரில் நடைபெற்ற 'நிலத்தடி நீர் பாதுகாப்பு முகாம்' குறித்து ஓர் அறிக்கை எழுதுக.

## பகுதி - இ

**7) சான்று தருக. (எவையேனும் மூன்று மட்டும்)** **(3)**

1. மகரக் குறுக்கம்

அ) மு∴டீது ஆ) மருண்ம் இ) கடலை ஈ) வௌவால்

2. தொடர் மொழி

அ) கண் ஆ) செய்தான் இ) அந்தமான் ஈ) கோதை வந்தாள்

3. இரட்டைக் கிளவி

அ) வருக வருக ஆ) கலகல இ) சோறு உண்டான் ஈ) தீதீதீ

ஏவல் விடை

அ) செய்யேன் ஆ) உடம்பு நொந்தது இ) நீயே செய் ஈ) கை வலிக்கும்

5. தொகையுவமை

அ) மலர்ப்பாதம் ஆ) தேன் போன்ற மொழி இ) மொழியமுது ஈ) விரல்பூ

**8) நிரப்புக. (எவையேனும் மூன்று மட்டும்)** **(3)**

1. சொல்லுக்கு ஈற்றில் வரும் ஐகாரக் குறுக்கம் ____________ மாத்திரையாகக் குறையும்.

அ) இரண்டு ஆ) கால் இ) ஒரு ஈ) அரை

2. முற்றுப்பெறாத வினைச் சொற்கள் வேறொரு ____________ கொண்டு முடிந்தால் அது வினையெச்சம் எனப்படும்.

அ) பெயர்ச்சொல்லை ஆ) வினைமுற்றை
இ) வினைச்சொல்லை ஈ) முற்றுப்பெறாத வினைச்சொல்லை

3. 'மாடு' என்ற சொல் ____________ ஆகும்.

அ) அ∴றிணைப் பொது ஆ) உயர்திணைப்பொது இ) விரவுப் பெயர் ஈ) இனங்குறித்தல்

4. தான் அறியாத ஒரு பொருளை அறிந்து கொள்வதற்காகப் பிறரிடம் வினவுவது ____________

அ) கொளல் வினா ஆ) ஐய வினா இ) அறிவினா ஈ) அறியா வினா

5. உவமை, உவமேயம் ஆகிய இரண்டையும் பொருத்துகின்ற உவம உருபு வெளிப்படையாக வருவது ________

அ) உவமைத் தொகை ஆ) விரியுவமை இ) தொகையுவமை ஈ) உருவகம்

**9. அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க (எவையேனும் மூன்று மட்டும்) (3)**

1. பஃறீது (இதில் உள்ள குறுக்கத்தை எழுதுக)

அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஆய்தக்குறுக்கம் இ) ஔகாரக்குறுக்கம் ஈ) மகரக்குறுக்கம்

2. படித்தாள் (வினையெச்சமாக மாற்றுக)

அ) படிப்பாள் ஆ) படித்தனள் முடித்தனள் இ) அன்மொழித்தொகை ஈ) இனங்குறித்தல்

3. வீட்டின் முன் ஐவர் கோலமிட்டனர் (இதன் இலக்கணக்குறிப்பு எழுதுக)

அ) ஒன்றொழி பொதுச்சொல் ஆ) விகாரச்சொல் இ) அன்மொழித்தொகை ஈ) இனங்குறித்தல்

4. மேற்பகுதி (இதன் ஒருபொருட் தரும் பன்மொழியை எழுதுக)

அ) குழிதாழ்ந்து ஆ) உயர்ந்தோங்கி இ) மீமிசை ஈ) நடுமையம்

5. மதிமுகம் (உருவகமாக மாற்றுக)

அ) மதி போல் முகம் ஆ) முகமதி இ) முகம் போன்ற மதி ஈ) மதி போன்ற முகம்

**10. இலக்கணக்குறிப்பு தருக. (எவையேனும் மூன்று மட்டும்) (3)**

1. தலைவன்

அ) ஆய்தக்குறுக்கம் ஆ) மகரக் குறுக்கம் இ) ஔகாரக் குறுக்கம் ஈ) ஐகாரக்குறுக்கம்

2. சென்று கேட்டான்

அ) எச்சம் ஆ) பெயரெச்சம் இ) வினையெச்சம் ஈ) வினைமுற்று

3. நாட்டைக் காக்க ஐவர் போர்க்களம் சென்றனர்

அ) இனங்குறித்தல் ஆ) ஒன்றொழிப்பொதுச்சொல் இ) அடுக்குத்தொடர் ஈ) இரட்டைக்கிளவி

4. அங்கே கிடப்பது பாம்போ? கயிறோ?

அ) அறிவினா ஆ) அறியா வினா இ) ஐய வினா ஈ) கொடை வினா

5. தாயொப்பப் பேசும் மகள்

அ) உவமைத் தொடர் ஆ) உவமைத்தொகை இ) உருவகம் ஈ) உவமேயம்

**11. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க. (எவையேனும் மூன்று மட்டும்) (3)**

1. அ) உவமை உவமேயம் ஆகிய இரண்டிற்கும் இடையில் வருவது விரியுவமை
ஆ) உவமை உவமேயம் ஆகிய இரண்டிற்கும் இடையில் வருவது உவம உருபு
இ) உவமை உவமேயம் ஆகிய இரண்டிற்கும் இடையில் வருவது தொகையுவமை
ஈ) உவமை உவமேயம் ஆகிய இரண்டிற்கும் இடையில் வருவது உருவகம்

2. அ) சொற்கள் பிரித்தால் பொருள் தராதது அடுக்குத்தொடர்
ஆ) சொற்கள் பிரித்தால் பொருள் தராதது இனங்குறித்தல்
இ) சொற்கள் பிரித்தால் பொருள் தராதது இரட்டைக்கிளவி
ஈ) சொற்கள் பிரித்தால் பொருள் தராதது ஒன்றொழிப்பொதுச்சொல்

3. அ) முற்றுப் பெறாத முழுமையடையாத வினைச் சொற்கள் தெரிநிலை வினைமுற்று ஆகும்.
ஆ) முற்றுப் பெறாத முழுமையடையாத வினைச் சொற்கள் குறிப்பு வினைமுற்று ஆகும்.
இ) முற்றுப் பெறாத முழுமையடையாத வினைச் சொற்கள் வினைமுற்று ஆகும்.
ஈ) முற்றுப் பெறாத முழுமையடையாத வினைச் சொற்கள் எச்சம் ஆகும்.

4. அ) விடை வகைகள் ஆறு வகைப்படும்.
ஆ) விடை வகைகள் ஏழு வகைப்படும்.
இ) விடை வகைகள் எண் வகைப்படும்.
ஈ) விடை வகைகள் ஐந்து வகைப்படும்.

5. அ) ஔகாரம் சொல்லிற்கு முதலில் மட்டுமே வரும்.
ஆ) ஔகாரம் சொல்லிற்கு இடையில் மட்டுமே வரும்.
இ) ஔகாரம் சொல்லிற்கு இறுதியில் மட்டுமே வரும்.
ஈ) ஔகாரம் சொல்லிற்கு இடையிலும் இறுதியிலும் வரும்.

## <u>பகுதி - ஈ</u>

**12. கீழ்வரும் பத்தியைப்படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5)**

உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள். இவற்றின் மொத்த அடிகள் 26,350. அக்காலத்தே இவ்வளவிற்கு விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள், உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை என்பது உலக இலக்கியங்களை ஆய்ந்த கமில்சுவலபில் என்னும் செக் நாட்டு மொழியியல் பேரறிஞரின் முடிவு.

மாக்சுமுல்லர் என்னும் மொழி நூலறிஞரோ தமிழே மிகவும் பண்பட்ட மொழியென்றும், அது தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழியென்றும் பாராட்டியிருக்கின்றார். உலக

இலக்கியங்கள் எவற்றிற்கும் இல்லாத் தனிச் சிறப்பு சங்க இலக்கியங்களுக்கு உண்டு. அவை தொன்மக் கருத்துக்களின் அடிப்படையில் எழுதாமல், மக்கள் வாழ்வியல் நெறிகளை வெளிபடுத்தின. ஆதலால், சங்க இலக்கியங்களை மக்கள் இலக்கியம் எனலாம்.

1. உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்ற இலக்கியங்கள் யாவை?

அ) அற இலக்கியங்கள் ஆ) இக்கால இலக்கியங்கள் இ) சங்க இலக்கியங்கள் ஈ) சமய இலக்கியங்கள்

2. உலக இலக்கியங்களை ஆய்ந்த கமில்சுவலபில் எந்நாட்டைச் சார்ந்தவர்?

அ) சீன நாட்டை ஆ) செக் நாட்டை இ) தமிழ்நாட்டை ஈ) இந்திய நாட்டை

3. சங்க இலக்கியம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

அ) உலக இலக்கியம் ஆ) தமிழின் இலக்கியம் இ) செந்தமிழ் இலக்கியம் ஈ) மக்கள் இலக்கியம்

4. சங்க இலக்கியங்களின் மொத்த அடிகள் எத்தனை?

அ) 26,350 ஆ) 23,650 இ) 25,350 ஈ) 25,650

5. தமிழே மிகவும் பண்பட்ட மொழியென்று பாராட்டியவர் யார்?

அ) கெல்லட் ஆ) அகத்தியர் இ) மாக்சுமுல்லர் ஈ) எமினோ

**13. கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதுக. (5)**

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்னும் வள்ளுவர் வாய்மொழியை நன்குணர்ந்தவர் பெரியார். ஒரு நாடு வளத்துடன் இருக்க வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும். ஒழுக்கமென்பதும் கற்பென்பதும் பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல் ஆண், பெண் இருபாலர்க்கும் பொதுவாகும் என்பது அவர்தம் கருத்து.

பெரியார் சமூக முரண்களை எதிர்த்தவர்; மூடக்கருத்துகளை முட்டறுத்தவர்; தொலைநோக்குப் பார்வையுடையவர்; பகுத்தறிவுக்குப் பொருந்தாதவற்றை அறுத்து எறிந்தவர்; சமூகமாற்றத்தை விரும்பியவர்; பெண்களே சமூகத்தின் கண்கள் எனக் கருதியவர்; பெண்களை அடிமைத்தளையிலிருந்து மீட்டவர். பெரியார் வழிகாட்டுதலால் தமிழகம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது.

1. சமூக முரண்களை எதிர்த்தவர் யார்?

அ) காந்தி ஆ) பெரியார் இ) அண்ணா ஈ) காமராசர்

2. பெண்கள் சமூகத்தின் ____________

அ) இழிவு ஆ) அழிவு இ) நாசம் ஈ) கண்கள்

3. பெரியாரின் வழிகாட்டுதலில் சமூகம் இன்று எவ்வாறு இருக்கிறது?

அ) குனிந்து ஆ) வெட்கப்பட்டு இ) தலைநிமிர்ந்து ஈ) செயலிழந்து

4. எந்தத் தலைவருடைய வாய்மொழியை நன்குணர்ந்தவர் பெரியார்?

அ) வள்ளுவர் ஆ) காந்தியடிகள் இ) நேரு ஈ) காமராசர்

5. ஒரு நாடு வளத்துடன் இருக்க வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் அனைவரும் எப்படி இருக்க வேண்டும்?

அ) மதிக்கப்படாதவர்களாக ஆ) பலமற்றவர்களாக
இ) ஒழுக்கமற்றவர்களாக ஈ) ஒழுக்கமுடையவர்களாக

**14. கீழ்க்காணும் செய்யுள் வரிகளைப் படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. (4)**

'பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைப்படச் சேய ஆயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றி யாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலர் ஆகுபவே.'

1. 'இடைப்படச் சேய' என்பதன் பொருள் யாது?

அ) உயரத்தில் ஆ) அருகில் இ) தொலைவில் ஈ) பள்ளத்தில்

2. 'மன்னிய' என்பதன் பொருள் ____________

அ) விரும்பத்தக்க ஆ) நிலைபெற்ற இ) ஆபரணம் ஈ) மாலை

3. அறிவும் ஒழுக்கமும் நிறைந்த சான்றோர்கள் யார் பக்கம் எப்போதும் இருப்பார்கள்?

அ) சான்றோர் பக்கம் ஆ) சாலார் பக்கம் இ) தங்களின் பக்கம் ஈ) யார் பக்கமும் இல்லை

4. இப்பாடல் இடம்பெற்ற நூல் யாது?

அ) ஏலாதி ஆ) தமிழ் வளர்ச்சி இ) நற்றிணை ஈ) புறநானூறு

**15. விடையளிக்க (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)** **2 x 5 = 10**

1. தமிழ் மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.

2. பெண்ணுரிமைக்கான வழிமுறைகளைப் பெரியார் வழிநின்று விளக்குக.

3. மேடைப்பேச்சின் கூறுகளை விளக்குக.

4. தமிழ் செம்மொழிக்குரிய தகுதிப் பாடுகளுள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.

5. குழந்தைத் திருமண எதிர்ப்பு குறித்து ஈ.வே.ரா கூறியனவற்றைத் தொகுத்து எழுதுக.

**16. எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.** **2 x 4 = 8**

1. காலத்தின் சிறப்பையும் காலம் அறிதலின் சிறப்பையும் எழுதுக.

2. மணிக்கவாசகர், இறைவனிடம் எவ்வாறு வேண்டுகிறார்?

3. தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை, நற்றிணைப் பாடல் வழித் தொகுத்து எழுதுக.

4. கண்ணகி குறித்து வாயிற்காவலன் கூறியவற்றை எழுதுக.

**17. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.** **(8)**

1. பரிதிமாற்கலைஞரைப் பற்றிச் சுருக்கி எழுதுக.

2. 'மெல்ல மெல்ல மற' என்ற கதையை சுருக்கி எழுதுக.

3. அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துக்களை சுருக்கி எழுதுக.

>>>>>>>>>>>><<<<<<<<<<<<